# போலந்து மொழி கவிதைகள்

மூலம் : விஸ்லவா சிம்போர்ஸ்கா *[Wislawa Szymborska 1923-2012 ]*
ஆங்கிலம் : கிளாரே காவென் மற்றும் ஸ்டனிஸ்லா பாரன்செக் *[Clare Cavanagh and Stanislaw Baranczak ]*
தமிழில் : தி. இரா. மீனா

## ஆத்மா பற்றிய சில வார்த்தைகள்

சில வேளைகளில்
ஓர் ஆத்மா நம்மிடமிருக்கிறது.
அதை ஒருவரும் எப்போதும்
தன்னுடன் வைத்துக் கொள்வதில்லை.
ஒவ்வொரு நாளும்,
ஒவ்வொரு வருடமும்,
அது இல்லாமலே கடந்து போகலாம்.
சில நேரங்களில்
குழந்தைப்பருவத்தின் அச்சத்தில் ஆனந்தத்தில்
அது சிலகாலம் குடியேறுகிறது.
நமது மூப்பின் திகைப்பில்
சில சமயங்களில்.
கஷ்டங்களின் போது
அபூர்வமாக அது கைக்கொடுக்கிறது.
அசையும் மரச்சாமான்கள் போல,
அல்லது தூக்கும் சுமைபோல,
அல்லது நெடுந்தூர நடையின் செருப்புக்கடி போல.
இறைச்சியைச் சிதைக்கும் போதும்,
அல்லது விண்ணப்பம் பூர்த்தி செய்யும் போதும்,
பொதுவாக அது வெளியில் வருகிறது
நம்மின் ஆயிரத்தில் ஒரு பேச்சில்
அது ஒரு தடவை பங்கு கொள்கிறது.

அப்படி வந்தாலும்
அது மௌனத்தை விரும்புகிறது.
உடல் வலியும், வேதனையும் அடைகையில்
அது தன் கடமையிலிருந்து நழுவுகிறது.
அது கவனமானது.
கூட்டங்களில் நாமிருப்பதை அது ஏற்பதில்லை
நம் நிச்சயமற்ற வியாபார அனுகூலங்களின் பரபரப்பு,
அதைக் களைப்படையச் செய்கிறது.
சந்தோஷம் துக்கம் இரண்டும்
அதற்கு வெவ்வேறு உணர்வுகளில்லை.
அவ்விரண்டும் இணையும்போதுதான்
அது நம்மிடம் வருகிறது.
எதைப்பற்றியும் நமக்கு உறுதியில்லாதபோதும்
எல்லாவற்றையும் அறிய முற்படும்போதும்
அதை நம்மால் கணிக்கமுடியும்
பருப்பொருள்களில் அது,
கடிகார ஊசல்களுக்கும்
கண்ணாடிகளுக்கும் ஆதரவு தருகிறது,
யாரும் கவனிக்காதபோதும்கூட
தளராமல் அவை பணிபுரிவதால்.
அது எங்கிருந்து வருகிறது என்றும்
அல்லது எப்போது போகும் என்றும் சொல்வதில்லை
ஆனால் அம்மாதிரியான வினாக்களை
அது எதிர்நோக்குகிறது.
சந்தேகத்திற்கிடமின்றி,
நமக்கு அது தேவை என்பது போல
எதற்காகவோ அதற்கும்
நாம் தேவைப்படுகிறோம். இருக்கலாம்
அது நடந்திருக்க முடியும்.
அது நடக்க வேண்டியிருந்தது.



ஓவியம்: ஜே.கே.



அது முன்பே நடந்தது. பின்னால்.
அருகில். மிகத் தொலைவில்.
அது நடந்தது, ஆனால் உனக்கல்ல.
முதலாவதாக இருந்ததால் நீ காப்பாற்றப்பட்டாய்.
கடைசியாக இருந்ததால் நீ காப்பாற்றப்பட்டாய்.
தனியாக. மற்றவர்களுடன்.
இடதில். வலதில்.
ஏனெனில் மழை பெய்தது. ஏனெனில் நிழலிருந்தது
ஏனெனில் அன்றைய நாள் உஷ்ணமாயிருந்தது.
உனக்கு அதிர்ஷ்டமிருந்தது ஒரு காடு இருந்தது
உனக்கு அதிர்ஷ்டமிருந்தது அதில் மரங்களில்லை
உனக்கு அதிர்ஷ்டமிருந்தது கருவி,
கொக்கி, தூண், தடுப்புக்கருவி
பலகணியின் பக்கம், ஒரு திருப்பம்,
ஒரு கால்இன்ச், ஒரு கணம்...
அதனால் நீ இங்கிருக்கிறாய்?
மற்றொரு மயக்கத் தவிர்ப்பு,
மயிரிழையில் தப்பித்தல், ஒத்தி வைப்பு?
வலையிலிருந்த ஓர் ஓட்டையால் நீ தப்பித்தாய்?
நான் இதைவிட அதிர்ந்திருக்க முடியாது
அல்லது பேச்சிழந்திருக்க முடியாது.
கேள்
உன் இதயம் எனக்குள் எப்படித் துடிக்கிறது என்று.

## போலந்து மொழி கவிதைகள்